ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2149/9 - 2019 නොවැම්බර් මස 11 වැනි සඳුදා - 2019.11.11

2149/9 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**ச.வ.பி. 5/2005**

**2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டம்**

2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் 4(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27 ஆம் பிரிவின் கீழ் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

தலதா அத்துக்கோரள,
நீதி மற்றும் சிறைச்சாலைகள்
மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2019, ஒற்றோபர் 29.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2019 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, விசேட மத்தியஸ்த (மத்தியஸ்தர்களின் தகைமைகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இரண்டாயிரத்துப் பதினெட்டு, யூலை 04 ஆந் திகதிய 2078/36 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்ட பிணக்குகளின் வகுதிகளைச் சேர்ந்த பிணக் கொன்று தொடர்பில், 2019, மே 27 ஆந் திகதிய 2125/8 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பிலான மத்தியஸ்தர் குழாமொன்றின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்குத் தகவுடைய ஆளொருவர்:-

    (அ) 35 வயதுக்கும் 70 வயதுக்கும் இடைப்பட்டவராக;

    (ஆ) விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பில் வதிபவராக;



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(இ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தோர் உயர் தொழில்சார் அல்லது உயர் கல்விக் குழுவிடமிருந்து பெற்றுக்கொண்ட உயர் தொழில்சார் அல்லது கல்விசார் தகைமையொன்றைக் கொண்டுள்ளவராக; அத்துடன்

(ஈ) ஒரு பகிரங்க அலுவலராக இருந்துள்ளவராக அல்லது இருப்பவராக அல்லது புலம்பெயர் தொழிலாளர்களினது பிணக்குகளையும் இன்னல்களையும் தீர்த்துவைப்பதற்கு இயைபுள்ள துறையொன்றிலான அறிவையும் திறன்களையும் கொண்டிருக்கின்ற ஆளொருவராக

இருத்தல் வேண்டும்.

11 - 1542

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.